வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2021

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

நிதி அமைச்சு

செயலகம் (3ஆம் மாடி)
த.பெ.இல. 277
கொழும்பு 00100

2021 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
செயலகம் (3ஆம் மாடி)
த.பெ.இ. 277
கொழும்பு
இலங்கை

Info@erd.gov.lk
http://www.erd.gov.lk

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2020

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

செலவினத் தலைப்பு இல. 239

உள்ளடக்கம்

- அத்தியாயம் 01 – நிறுவன விபரம் / நிறைவேற்றுச் சுருக்கம்
- அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு
- அத்தியாயம் 03 – குறித்த வருடத்துக்கான பொதுவான நிதிச் செயலாற்றுகை
- அத்தியாயம் 04 – செயலாற்றுகை சுட்டிகள்
- அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி இலக்குகளின் செயலாற்றுகை
- அத்தியாயம் 06 – மனித வள விபரம்
- அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை

அத்தியாயம் 01 – நிறுவன விபரம் / நிறைவேற்றுச் சுருக்கம்

1.1. அறிமுகம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது வெளிநாட்டு நிதியுதவிகளை திரட்டுவதற்கான அதிஉயரந்த அரசாங்க திணைக்களம் என்பதுடன் இது தொடர்பாக ஏனைய திறைசேரி திணைக்களங்களுடனும் நிரல் அமைச்சுக்களுடனும் ஒருங்கிணைப்பினைப் பேணுவது இதன் பொறுப்பாகும்.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது பணிப்பாளர் நாயகம் மற்றும் நான்கு மேலதிகப் பணிப்பாளர் நாயகங்களின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் உரிய பணிப்பாளர்களின் மூலம் பின்வரும் பிரிவுகளும் தலைமை வகிக்கப்படுகின்றன

- ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு
- கிழக்கு ஆசியப் பிரிவு
- உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிப் பிரிவு
- சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிப் பிரிவு
- மத்திய கிழக்கு, தென்னாசிய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் முகவராண்மை பிரிவு
- முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் பிரிவு
- தொழில்நுட்ப உதவி பிரிவு
- மூலதனச் சந்தை மற்றும் முதலீட்டுப் பிரிவு
- படுகடன் முகாமைத்துவப் பிரிவு
- துறை ஒருங்கிணைப்பு பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- கணக்குகள் பிரிவு
- தகவல் தொழில்நுட்ப பிரிவு

1.2. நிறுவனத்தின் நோக்கு செயற்பணி குறிக்கோள்

நோக்கு

இலங்கையின் நிலைத்து நிற்கும் பொருளாதார அபிவிருத்திக்காக வளங்களை ஒன்று திரட்டுதல்

செயற்பணி

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான உலகளாவிய அறிவு, அனுபவம், தேர்ச்சி மற்றும் பொருத்தமான நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான மூலங்களை வழங்குதல் அதேபோன்று பணி மூலதனம் மற்றும் நாட்டின் அபிவிருத்தித் தேவைப்பாடுகளுக்காக உள்நாட்டு நிதியங்களை திட்டமிடுதல்

குறிக்கோள்கள்

- அபிவிருத்தி தேவைகளுக்காக வெளிநாட்டு வளங்களை பொருத்தமான நிபந்தனையின் கீழ் ஒன்று திரட்டுதல்.
- திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வளங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக நிறைவேற்று மற்றும் செயற்பாட்டு நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்.
- வெளிநாட்டு திறன்விருத்தி பயிற்சி வாய்ப்புகளை வினைத்திறன்மிக்க முறையில் ஒன்று திரட்டுவதன் மூலம் அரசாங்க துறையின் மனிதவள அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்தல்.
- திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களை வினைத்திறனுடனும் அதேபோன்று செயல்திறனுடன் நிறைவேற்றும் பொருட்டு திணைக்களத்தின் ஆற்றல்களை வலுவூட்டுதல்.

1.3. பிரதான பணிகள்


- அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்.
- ஒவ்வொரு அபிவிருத்திப் பங்காளிகளும் வருடாந்தம் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கவுள்ள வெளிநாட்டு நிதிகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களில் செயற்பாடுகளை நிரல் அமைச்சுடன்/ நிறுவனத்துடன் கூட்டிணைத்தல்.
- நிரல் அமைச்சுடன்/ தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து வெளிநாட்டு நிதியிடலுக்காக கருத்திட்ட ஒழுங்குகளை தயாரித்தல்.
- வெளிநாட்டு உதவிகளை வழங்குகின்ற வெளிநாட்டு தூது குழுக்களின் செயற்பாட்டு நிலைமையை ஆய்வு கட்டத்திலிருந்து மதிப்பீட்டு கட்டம் வரை கூட்டிணைத்தல்.
- வெளிநாட்டு உதவிகள் பற்றிய உடன்பாட்டு கலந்துரையாடலை நடாத்துதல் மற்றும் கடன்/ மானிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அந்த உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் பணிகளில் ஈடுபடுதல்.
    - அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் முகவர் நிறுவனங்களுடன் உடன்பாட்டு கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்.
    - உடன்படிக்கைகளில் கைச்சாத்து சம்பந்தமாக அரசாங்கத்தின் அனுமதியையும் அதிகார தத்துவத்தையும் பெற்றுக்கொள்ளுதல்
    - நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுடன் உப கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல்.
    - கடன் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு தேவையான முன் நிபந்தனைகளை பூர்த்தி செய்தல்.

- வெளிநாட்டு கடன்கள்/ மானியங்கள் மூலம் நிதியளிக்கப்படுகின்ற கருத்திட்டங்களின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

    - மேம்பாட்டுப் பங்குதார்ரகளின் மீளாய்வுப் பணிகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பின்தொடர்தல் நடவடிக்கைகளை எடுத்தல்.
    - வெளிநாட்டு நிதியிடலின் மூலம் செயல்படுத்தப்படும் கருத்திட்டங்களைச் மேற்பார்வையிடுவதற்காக நிரல் அமைச்சுக்களினால் அமைக்கப்பட்ட வழிநடத்தல் குழுக்களில் பங்குபற்றுதல் மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்களுடன் இணைந்து கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி பங்காளிகளிடமிருந்து கிடைக்கின்ற வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை முகாமை செய்தல்.
- பின்வரும் நடவடிக்கைகளின் மூலம் வெளிநாட்டு அரசாங்க கடனை நிர்வகிப்பதில் மதிப்பீடு செய்தல்
    - பொதுநலவாய கடன்களைக் குறித்திக் கொள்ளுதல் மற்றும் கடன் முகாமைத்துவ அமைப்பின் (CS-DRMS) மூலம் அரசாங்க வெளிநாட்டு கடன் பிரிவு பற்றிய தரவுத்தளத்தை பராமரித்தல்
        - கடனைத் திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகள் மற்றும் உடன்படிக்கைகள் தொடர்பான தொடர்புடைய தகவல்களைச் சேர்த்தல்.
        - கடன்/ மானிய உடன்பாடுகள், வருமானம், வட்டி மற்றும் தவணைக் கொடுப்பனவுகள், நாணயமாற்று விகிதங்கள், தளம்பல் வட்டி விகிதங்கள் மற்றும் தொடர்புடைய பேரண்டப் பொருளாதாரத் தரவுகளைச் சேர்த்தல்.
    - சரியான நேரத்தில் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு கடன் சேவை பற்றிய ஆலோசனைகளை வழங்குதல்.
    - அரசிறை முகாமைத்துவம் மற்றும் ஏனைய தீரமானங்களை எடுப்பதில் உதவும் பொருட்டு வெளிநாட்டு கடன் சேவை எதிர்வுகூறல் தரவுகளை வழங்குதல்.
    - கணக்கீடு மற்றும் வெளியீடுகளுக்காக தொடர்புடைய நிறுவனங்களுக்கு கடன் தரவுகளை விநியோகித்தல்.
    - உலக வங்கிக்கு மற்றும் சர்வதேச நாணய நிதிக்கு காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் வெளிநாட்டுக் கடன் தரவுகளைப் அறிக்கையிடுதல்.
    - பொது மக்களின் பயன்பாட்டிற்காகவும் ஏனைய பங்குதார்ர்களுக்காகவும் திணைக்களத்தின் இணையதளத்தில் வெளிநாட்டுக் கடன்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துதல்.
    - தரவுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக, அபிவிருத்திப் பங்குதார்ர்களுடன் அவ்வப்போது கடன் தரவுகளை மீளிணக்கம் செய்தல்.
    - தேவைக்கேற்ப கடன் தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.
- பணி மூலதனம் மற்றும் நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்கு உள்நாட்டு நிதியை வழங்குதல்.
- அனைத்து வெளிநாட்டு நிதியிடல் கருத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் வருடாந்த வரவுசெலவு தயாரிப்புச் செயல்முறைக்கு வசதிகளை வழங்குதல்.

1.4. நிறுவனக் கட்டமைப்பு



அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு

2.1 அறிமுகம் மற்றும் எதிர்கால நோக்கு

உள்நாட்டு சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கும் அதேபோன்று பொருளாதார அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்ட அரச முதலீடுகளை பேணுவதற்கும் வெளிநாட்டு நிதியிடல் மிகவும் முக்கியமான பணியை மேற்கொண்டு வருகின்றது.

உலகளாவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை 2020 ஆம் ஆண்டு முழுவதும் அதேபோன்று 2021 ஆம் ஆண்டிலும், தொடர்ச்சியாக நிலவியதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் கடினமான நிலைக்கு உள்ளாகியுள்ளது. இந்த தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சகல அபிவிருத்திப் பணிகளுக்கும் தடை ஏற்பட்டுள்ள அதேவேளையில், இதன் காரணமாக இந்தக் காலகட்டம் முழுவதும் அரசாங்க வருமானத்தில் தொடர்ச்சியாக வீழ்ச்சியும், அதன் பெறுபேறாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறைப்பாட்டு நிலையொன்றும் காணக்கூடியதாக இருந்தது.

இதற்கு மேலதிகமாக, பாரிய அளவிலான தடுப்பூசி ஏற்றல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கொவிட்-19 தொற்று நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான சுகாதார வசதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றின் பொருட்டு குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நிதியம் தேவைப்பட்டது. அதன் பெறுபேறாக அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக அதுவரையில் ஒதுக்கப்பட்டிருந்த ஒரு சில வெளிநாட்டு நிதியம் கொவிட்-19 தொற்றுநோய் சார்ந்த சுகாதார வசதிகளை மேம்படுத்துவது சம்பந்தமான கருத்திட்டங்களுக்கும் நிகழ்ச்சி திட்டங்களுக்கும் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது.

தற்போது காணப்படுகின்ற நிலைமைக்கு அமைவாக, நாட்டில் வெளிநாட்டில் நிதியத்தின் பயன்பாடு சம்பந்தமான உபாய திட்டமானது எதிர்கால கடன் சேவையை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் வருமான பாய்ச்சலை உருவாக்கக்கூடிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளது. நாட்டில் நிலவுகின்ற அந்நியச்செலாவணி பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து கவனம் செலுத்தி நாட்டுக்குள் குறிப்பிடத்தக்க அளவில் அன்னியச் செலாவணியை கொண்டு வருகின்ற பலதரப்பு அபிவிருத்தி நிதி வசதிகளினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களை மிகவும் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியிடல் உடன்படிக்கைகளை செய்துகொள்ளும் போது அரசாங்கம் மிகவும் கவனமாக இருந்த அதேவேளையில், இதன்போது வெளிநாட்டு நிதி வசதிகளை பெற்றுக் கொள்வதிலும் பார்க்க உள்நாட்டு நிதியத்தை இதற்காக பயன்படுத்திக் கொள்வது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரதிபலனாக, 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் நாட்டின் ஒட்டுமொத்த அரசாங்கத்தின் படுகடன் அளவை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன் விகிதாசாரத்தை முறையே நூற்றுக்கு 40 மற்றும் நூற்றுக்கு 60 சதவீத மட்டத்திற்கு கொண்டு வரக்கூடியதாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு நிதியங்களை பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் தேறிய நிதிப் பாய்ச்சல் வருடாந்த பயன்பாட்டுக்கும் வருடாந்த கடன் மீள்கொடுப்பனவுக்கும் இடையிலான வேறுபாடு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ஐ.அ.டொலர் 457 மற்றும் ஐ.அ.டொலர் 260 ஆகக் காணப்பட்ட அதேவேளையில் 2021 ஆம் ஆண்டில் அது மேலும் ஐ.அ.டொலர் 28 மில்லியன் வரை குறைவடைந்தது.

2020/2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் சர்வதேச இறையாண்மைக் கடன் தரப்படுத்தலில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக வெளிநாட்டு நிதிச் சந்தையினூடாக இலங்கையின் நிதியிடல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றல் தற்போது குறைவடைந்துள்ளது. அதனால் முன்வரும் வருடங்களில் வெளிநாட்டு நிதியிடல் வளங்களை ஒன்றுதிரட்டுவதற்காக புதிய நிதி மூலங்களை தேடிப் பார்ப்பது மிகவும் முக்கியமானதாகும்.

2.2 முன்னேற்றம் - 2021

2.2.1 வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்பு

அரச முதலீட்டுத் நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான வெளிநாட்டு நிதியுதவியை வழங்குவதற்காக, அரசாங்கம் பல்வேறு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் 2021 ஜனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை 26 வெளிநாட்டு நிதியிடல் உடன்படிக்கைகள் மூலம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ஐ.அ.டொலர்) 2471.4 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இதில், ஐ.அ.டொலர 1623.3 மில்லியன் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி கடன்கள் மற்றும் ஐ.அ.டொலர் 39.3 மில்லியன் மானியங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் ஆகும். மீதித் தொகை சீன அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட ஐ.அ.டொலர் 808.8 மில்லியன் தவணை நிதி வசதிகளை உள்ளடக்கியுள்ளது.

இந்த காலகட்டத்தில் மிக உயர்ந்த உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி நிதி உடன்பாடுகள் உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ள அதேவேளையில் இது ஐ.அ.டொலர் 983.3. மில்லியன் ஆகும். எஞ்சியுள்ள அதிகூடிய தொகையில் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐ.அ.டொலர் 463.3 மில்லியன்), இந்தியா (ஐ.அ.டொலர் 100 மில்லியன்), ஹங்கேரியா (ஐ.அ.டொலர் 60.7 மில்லியன்) மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (ஐ.அ.டொலர் 42.7 மில்லியன்) ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது.


வெளிநாட்டு மூலங்களின் உடன்படிக்கைகளில் அதிகூடிய அளவு ஐ.அ.டொலர் 808.8 மில்லியன் ஆகும். அதாவது, மொத்த உத்தியோகபூர்வ உடன்படிக்கைகளில் 33% சதவீதம் கொடுப்பனவு மீதித் துறைக்கு பெறப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, ஐ.அ.டொலர் 774.3 மில்லியன் வீதிகள் மற்றும் பாலங்கள் துறைக்கும் ஐ.அ.டொலர் 440.9 மில்லியன் சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரித் துறைக்கும் பெறப்பட்டுள்ளது. மத்திய காலப்பகுதியில் நாட்டின் கடன் சுமையை குறைப்பதற்கு புதிய உபாயத் திட்டங்கள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ளபடியினால் 2021 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த உடன்படிக்கைகள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது குறைவடைந்துள்ளன.

உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் சந்தைக் கடன் உடன்பாடுகள் 2021,
அபிவிருத்தி பங்காளிகளுக்கு அமைவாக (ஐ.அ.டொலர் மில்லியன்)


அபிவிருத்திப் பங்காளர்	கடன்	மானியம்	மொத்தம்
இருதரப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்தழைப்பு	161.7	**12.0**	**173.3**
இந்தியா	100.0	-	61.7
ஹங்கேரி	61.7	12.5-	12.512.0
கொரியா	-	12.0	
பலதரப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்தழைப்பு	**1,461.5**	**27.3**	**1,489.0**
ஆசிய அபிவிருத்தி வங்கி	460.0	3.0	463.0
உலக வங்கி	959.8	23.3	983.3
விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்	41.7	1.0	42.7
சந்தைக் கடன்;	**808.8**	**-**	**808.8**
அன்னியச் செலாவணி தவணை நிதி வசதி	808.8	-	808.8
மொத்தம்	**2,432.1**	**39.3**	**2,471.4**

2.2.2 வெளிநாட்டு நிதியிடல் செலவழிப்பு மற்றும் பயன்பாடு

உடன்பாடுகள் 2021, அபிவிருத்தி பங்காளிகளுக்கு அமைவாக (ஐ.அ.டொலர் மில்லியன்)



உடன்பாடுகள் 2021, பிரதான பொருளாதார துறைக்கு அமைவாக (ஐ.அ.டொலர் மில்லியன்)



மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

2021 ஜனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஐ.அ.டொலர் 2,415.1 மில்லியன் வெளிநாட்டு நிதியிடல் செலவிடப்பட்டுள்ளன. இதில், ஐ.அ.டொலர் 2,397.8 மில்லியன் கடன் செலவழிப்பாகக் காணப்படுகின்ற அதேவேளையில் ஐ.அ.டொலர் 17.3 மில்லியன் மானியமாக செலவிடப்பட்டுள்ளன.

இந்த செலவழிப்புகளில் அதிகபட்ச தொகையானது சீனாவுடன் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கைகள் மூலம் பெறப்பட்ட அதேவேளையில் இது மொத்தத் தொகையில் அண்ணளவாக நூற்றுக்கு 33.5 சதவீதம் ஆகும். அதைத் தொடர்ந்து அதிகூடிய தொகை முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி (நூற்றுக்கு 18 சதவீதம்) மற்றும் உலக வங்கி (நூற்றுக்கு 25.5 சதவீதம்) ஆகியவற்றுடன் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செலவழிப்புகள் ஆகும்.

ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையான வெளிநாட்டு கடன் மற்றும் மானியங்கள் நிதியிடல்

அபிவிருத்திப் பங்காளர்	பகிர்வு (ஐ.அ.அ.டா. மில்)*		
	கடன்	மானியம்	மொத்தம்
இருதரப்பு	**504.7**	**0.1**	**504.8**
சீனா	137.8	-	138.9
ஜப்பான்	134.6	-	134.9
பிரான்ஸ்	42.3	0.1	42.4
இந்தியா	86.5	-	86.5
நெதர்லாந்து	30.9	-	30.9
ஐக்கிய இராச்சியம	7.2	-	7.5
குவைட்	14.9		14.9
ஆஸ்திரியா	11.7		11.7
கொரியா	10.6		10.6
சவுதி அரேபியா	10.0		10.0
ஸ்பைன்	4.7		4.7
ஜேர்மனி	0.3		0.3
ஹங்கேரியா	13.2		13.2

பல்தரப்பு	**1,083.8**	**17.2**	**1,101.0**
உலக வங்கி	428.1	8.4	436.5
ஆசிய அபிவிருத்தி வங்கி	610.2	4.6	614.8
ஐக்கிய நாடுகளின் முகவர் நிலையம்	-	4.2	4.2
ஓபெக் நிதியம்	15.9	-	15.9
விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்	7.5	-	7.5
ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வங்கி	21.8	-	21.8
சந்தைக் கடன்	**809.1**	**-**	**809.1**
சீன அபிவிருத்தி வங்கி	809.1	-	809.1
மொத்தம்	**2,397.0**	**17.3**	**2,415.1**


மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு: ஒவ்வொரு அந்நியச் செலாவணியின் மூலம் குறிப்பிடப்படுகின்ற பெறுமதிகள் ஐ.அ.டொலர் மற்றும் ரூபாயாக மாற்றும் போது 2021 டிசம்பர் 31 இல் காணப்பட்ட நாணய மாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.


* தற்காலிகமானது

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவழிப்புகளில் பெரும்பகுதி கொடுப்பனவு மீதித் துறையின் (33.5 சதவீதம்) பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளையில் அதைத் தொடர்ந்து அதிகூடிய தொகை வீதிகள் மற்றும் பாலங்கள் (16.8 சதவீதம்), சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரி (9.9 சதவீதம்) மற்றும் போக்குவரத்து (6.5 சதவீதம்) ஆகிய துறைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களில் பயன்படுத்தும் பொருட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

செலவழிப்பு - அபிவிருத்தி பங்காளர்களுக்கு அமைவாக – 2021 (ஐ.அ.டொலர் மில்லியன்)




செலவழிப்பு - துறைவாரியாக 2021 (ஐ.அ.டொலர் மில்லியன்)



மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

2.2.3. வெளியிடப்பட்ட உடன்பாடுகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய இருப்பு

தற்போது நடைமுறையில் உள்ள உடன்பாடுகளின் பிரகாரம், அடுத்த 3-5 ஆண்டுகளில் பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பயன்படுத்தப்படவுள்ள வெளிநாட்டு நிதியிடல்களின் இருப்பு 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 7,947.2 மில்லியன் ஆகும்.



*தற்காலிகம்

2.2.4. வெளிநாட்டு கடன் மற்றும் வெளிநாட்டு கடன் சேவை

2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, அரசாங்கம் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன் நிதியிடலுக்காக திருப்பி செலுத்துவதற்கு சேர்ந்திருந்த வெளிநாட்டுக் கடன் தொகை ஐ.அ.டொலர் 34.21 பில்லியன் ஆகும். மேலும், 2021 சனவரி 1 முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான கடன் சேவை ஐ.அ.டொலர் 3,862.5 மில்லியன் ஆகும். இதில் ஐ.அ.டொலர் 2,581.7 மில்லியன் மீதமுள்ள கடனை செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில் எஞ்சிய ஐ.அ.டொலர் 1,280.8 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுகளுக்காக பய

பெயர்: டி.ஏ.பி. அபேசேகர

பதவி: பணிப்பாளர் நாயகம்

கையொப்பம்: .....

ඩී.ඒ.පී. අබේසේකර
අධ්‍යක්ෂ ජනරාල්
විදේශ සම්පත් දෙපාර්තමේන්තුව
මුදල් අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය, කොළඹ 01.

[1] திறைசேரி உண்டியல்கள் - முறிகளின் குடியிருப்பு அல்லாத இருப்புக்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOE கள்) நிலுவையிலுள்ள கடன் ஆகியவை சேர்க்கப்படவில்லை.

[2] படுகடன் சேவை = மூலதனக் கொடுப்பனவுகள் + வட்டிக்கொடுப்பனவுகள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOE கள்) படுகடன் சேவை கொடுப்பனவுகள் என்பன உள்ளடக்கப்படவில்லை

அத்தியாயம் 03 - 2021 டிசம்பர் 31 நிறைவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

2021 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூபா

வ .செ . திட்டம் 2021		குறிப்பு	உண்மையான 2021	உண்மையான 2020	
-	**வருமான பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	**1**	-	-	ஏசீஏ **-1**
-	உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி சர்வதேச வர்த்தகம்	**2**	-	-	
-	மீதான வரி வரியல்லா வருமானம்	**3**	-	-	
-	மற்றும் பிற	**4**	-	-	
-	**மொத்த வருமான பெறுகைகள்(அ)**		-	-	
-	**வருமானமல்லாத பெறுகைகள்**		-	-	
	திறைசேரி முற்பணம்		1,343,113,026	1,253,995,076	
	தேர்தல் திணைக்களத்தின் துணை முற்பண தீர்வு		-	-	ஏசீஏ **-3**
-	வைப்புகள்		-	30,000	ஏசீஏ **-4**
-	முற்பணக் கணக்குகள்		9,549,076	7,510,890	ஏசீஏ **-5/5(a)/5(b)**
-	வேறு பெறுகைகள்		299,500,302	308,271,756	
-	**மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)**		**2,760,919,288**	**4,361,759,939**	
-	**மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள்இ = (அ)+(ஆ)**		**2,760,919,288**	**4,361,759,939**	
	கழி: செலவினம்				ஏசீஏ **-2(ii)**
-	**மீண்டெழும் செலவினம்** வேதனாதிகள்,		-	-	

114,000,000		5	87,263,011	96,550,604	
61,630,000	சம்பளங்கள் ,பிறஊழிய நன்மைகள் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	31,972,083	35,131,358	
402,000,000	உதவுதொகை ,மானியம் மற்றும் மாற்றல்கள்	7	351,925,061	325,808,839	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	-	-	
577,630,000	**மொத்த மீண்டெழும் செலவினம்)ஈ(**		**471,160,155**	**457,490,801**	
	மூலதனச் செலவினம்				
3,370,000	மூலதனசொத்துக்களின்பு னரமைப்பு மற்றும் மேம்பாடு	10	1,833,770	135,000	
21,200,000	மூலதன சொத்துக்களை கையகப்படுத்தல்	11	11,433,933	3,527,109	
890,900,000	மூலதன மாற்றல்கள்	12	858,681,061	796,792,630	ஏசீஏ **-2(ii)**
-	நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல்	13	-	-	
304,000,000	திறன் மேம்பாடு	14	65,341,723	316,791,585	
-	பிற மூலதன செலவுகள்	15	-	-	
1,219,470,000	**மொத்த மூலதன செலவினம் (உ)**		**937,290,487**	**1,117,246,324**	
	வைப்பு கொடுப்பனவுகள்		226,546	88,285	ஏசீஏ **-4**
	முற்பண கொடுப்பனவுகள்		9,157,821	10,113,791	ஏசீஏ **-5**
	ஏனைய பிரதான பேரேட்டு கொடுப்பனவுகள்		-	-	
	பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)		**9,384,367**	**10,202,076**	
	மொத்த செலவினம் எ= (ஈ+உ+ஊ)		**1,417,835,009**	**1,584,939,201**	
	31 ர்பம்சடி இல் மீதி ஏ = (இ−எ)		**(3,509,894)**	**1,520,956**	
	முற்பண நல்லிணக்க அறிக்கையின்படி மீதி		**(3,509,894)**	**1,520,956**	ஏசீஏ **-5**
	ர்பம்சடி 31 இல் முற்பண மீதி		-	-	ஏசீஏ **-3**
			(3,509,894)	**1,520,956**	

ஏசீஏ- எப்

3.2 நிதி நிலைமைப் பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
தி சொத்துக்கள் அற்றது			
ூதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	180,166,353	143,365,380
தி சொத்துக்கள்			
ற்பனைக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	20,767,370	21,153,731
ங் மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
ொத்த சொத்துக்கள்		**200,933,723**	**164,519,111**
ரிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
றைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		20,767,370	21,153,731
ூதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ுக்கம்		180,166,353	143,365,380
ாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
டமுறைப் பொறுப்புக்கள்			
ுப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
ுக்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
ொத்தப் பொறுப்புக்கள்		**200,933,723**	**164,519,111**

க இலக்கம் 08 முதல் 55 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற ணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 56 முதல் 63 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் திப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ாதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் ிக்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் ண்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான ணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது ன்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

ந்த நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் ந்த நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் ொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் ற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....
ிதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
ர்:
வி:
தி:

S. R. Attygalle
Secretary to the Treasury and
Secretary to the Ministry of Finance
The Secretariat
Colombo 01

.....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

D.A.P. Abeysekera
Director General
Department of External Resources
Ministry of Finance
The Secretariat
Colombo 01 - Sri Lanka

.....
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : Signed by N.W.K.C. Buddhika
திகதி : 2022/02/23

Buddhika
Assistant Director
Department of External Resources
Ministry of Finance
The Secretariat
Colombo - 01, Sri Lanka.

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

	உண்மை	
	2021	2020
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		-
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	70,066,778	322,077,028
துணை நிதி - தேர்தல் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டது		30,000
ஏனைய செலவின தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,343,113,026	1,253,995,076
முற்பண மீட்பு	7,743,125	4,130,418
கிடைக்கப் பெற்ற வைப்பு	226,546	88,285
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**1,421,149,475**	**1,580,320,807**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	118,978,093	154,069,500
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	351,925,061	344,062,249
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	20,000	256,241
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	3,651,468	974,817
முற்பணக் கொடுப்பனவுகள்	9,057,820	3,988,009
வைப்பு கொடுப்பனவுகள்	226,456	88,285
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**483,858,988**	**643,074,483**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**937,290,487**	**1,117,246,324**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		

கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	937,290,487	
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு		1,117,246,324
முற்பணக் கொடுப்பனவுகள்	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**937,290,487**	**1,117,246,324**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(937,290,487)**	**(1,117,246,324)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன் மீள் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவுகள்	-	-
வைப்புகளின் கொடுப்பனவு	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு(ஐ)	-	-
நிதி செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)-(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபடட்தாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா ,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆ சல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
		தொடர்பில்லை			

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா ,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	577,700,000	577,630,000	471,160,155	82%
மூலதனம்	1,219,400,000	1,219,470,000	937,290,487	77%

3.7 நி குறிப்பு ப.பி.208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் துகவராக அத்திணைக்களம் மாகாண சபைக்கான செலவினத்திற்கான / மாவட்டச் செயலகம் / ஒதுக்கீடு

ரூபா ,000

தொடர் இல.	அமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
			தொடர்பில்லை			

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா ,000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2021 திகதியுடனான சமன் அறிக்கை படி மீதி	31.12.2021 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு		157,027,475.61	-	100%
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்				
9153	காணி		7,238,878.22		100%
9154	அருவான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்				
9180	குத்தகை சொத்துக்கள்		15,900,000.00		100%

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

** கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட வேண்டிய 2021 டிசம்பர் 31 இற்கான இறுதி கணக்காய்வு அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 1).

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டு திடட்த்தை அடிப்படையாகக் கொண்டது)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதமாக (%) உன்மையான வெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
நிதி உடன்படிக்கைகள*	110		
நிதி பகிர்வுகள*	156		
தொழில்நுட்ப பயிற்சி வாய்ப்புகள் (அலுவலர்களின் எண்ணிக்கை)	107		

அத்தியாயம் - 05 நிலையான அபிவிருத்தி இலக்குகள் செயலாற்றுகை

5.1 இனம்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டல்

இலக்கு / நோக்கம்	அடைவுகள்	அடைவுச் சுட்டிகள்	உரிய திகதியில் அடைவு முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%- 100%
நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்	ஐ.அ.டொ. 11,600 மில்	பெறுநர் மற்றும் நன்கொடையாளர் நாடுகள் மற்றும் வழங்கல் வகை ஆகியவற்றால், வளர்ச்சிக்கான மொத்த வள ஒதுக்கம் (உ+ம் - உத்தியோகபூர்வ உதவி, வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் ஏனைய வழங்கல்) *அடைவு: ஐ.அ.டொ.14,088 மில்*			121
நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடக்கிய நிலையான தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்	ஐ.அ.டொ. 10,701 மில	மொத்த உத்தியோகபூர்வ சர்வதேச ஆதரவு (உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி மற்றும் உட்கட்டமைப்புக்கான ஏனைய உத்தியோகபூர்வ ஒதுக்கு) *அடைவு: ஐ.அ.டொ.12,059 மில்*			112
அனைத்ததையும் உள்ளடக்கிய மற்றும் சமமான தரமான கல்வியை உறுதி செய்தல், முழுவதும் கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல்	66 பயிற்சி வாய்ப்புகள்	துறை மற்றும் கற்கை வகை அடிப்படையில் புலமைப்பரிசிலுக்கான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளின் அளவு. குடைத்த வாய்ப்புகளின் எண்ணிக்கை:107			162

5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் சுருக்க விபரம்

அபிவிருத்தி பங்காளர்கள் ஆண்டுதோறும் வெளிநாட்டு நிதியைச் செய்கிறார்கள், இது மொத்த கடமைகளாக பதிவு செய்யப்படுகிறது. நிரல் அமைச்சுக்களின் தொடர்புடைய வளர்ச்சித் திடடங்கள்ள அமல்படுத்துவதன் மூலம், வேளாண்மை, நீர்ப்பாசனம், திறன் மேம்பாடு, கல்வி, வறுமை ஒழிப்பு, சாலை, நெடுஞ்சாலைகள், நகர்ப்புற மேம்பாடு, சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் வெவ்வேறு திட்டங்களை செயல்படுத்த இந்த உறுதியான நிதி வழங்கப்படுகிறது. இருப்பினும், சுற்றுச்சூழல் அனுமதி, நிலம் கையகப்படுத்தல், பயன்பாட்டு மாற்றம், இடமாற்றம் மற்றும் மீள்குடியேற்றம், மதிப்பீடு மற்றும் கொள்முதல் போன்ற திட்ட தயார்நிலை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக, திட்டமிட்டபடி விநியோகத்தை உணர முடியாது.

அத்தியாயம் 06 – மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்பொழுதுள்ள பதவியணி	வெற்றிடங்கள் ∴(மேலதிக)**
சிரேட்ட	43	33	10
மூன்றாம் நிலை	4	3	1
இரண்டாம் நிலை	66	55	10
ஆரம்ப நிலை	31	27	4

6.2 **நிறுவனத்தின் செயலாற்றுகையிளை பாதிக்கும் வகையில் மனித வளங்களில் பற்றாக்குறை அல்லது மிகையான நிலைமையின் விபரம்

அமைச்சரவை, மத்திய வங்கியின் நாணய சபை, சடடமர் அதிபர் திணைக்கன், மற்றும் ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட முறையான ஒப்புதல்களுடன் வெவ்வேறு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் வெவ்வேறு அபிவிருத்தி பங்காளிகளிடமிருந்து வெளிநாட்டு வளங்களை திரட்டுவதே வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பங்களிப்பாகும். வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கடடளைியை அடைவதற்கு, பேச்சுவார்த்தை திறன்கள், மொழித் திறன்கள் மற்றும் பொருளாதாரம், பொதுக் கொள்கை, பொது நிதி, புள்ளிவிவரங்கள், கருத்திட்ட திட்டமிடல் மற்றும் உருவாக்கம், கடன் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு போன்றவற்றில் முழுமையான பணி அறிவு போன்ற தேவையான திறன்களைக் கொண்ட பணியாளர்கள் தேவை. பயிற்சி பெற்ற அதிகாரிகள் வருடாந்த பரிமாற்ற திட்டங்கள் மூலம் மாற்றப்படுகிறார்கள், மேலும் பதவியணி பதவிகள் இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளால் நிரப்பப்படுகின்றன. வருடாந்த பரிமாற்றத் திட்டங்களின் கீழ் வருபவர்களிடையே தேவையான திறன்களும் அறிவும் உள்ள அதிகாரிகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம் என்பதுடன் அவர்களுக்கு பயிற்சி அளிக்க திணைக்களம் குறைந்தது 2 ஆண்டுகள் ஆகும். இது திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை பாதிக்கிறது.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்ட பெயர	பயிற்றப்பட்ட பதவியணி எண்.	நிகழ்ச்சித்திட்டத் தின் காலம்	மொத்த முதலீடு (ரூபா'000)		நிகழ்ச்சித் திட்ட இயல்பு (வெளிநாடு ∴ உள்நாடு)	வெளியீடு∴ பெறப்பட்ட அறிவு*
			உள்நாடு	வெளிநாடு		
1. கேம்ரிஜ் பல்கலைக்கழகம் - ADBI FinTech மற்றும் ஒழுங்குபடுத்தல் புத்தாக்கக் கற்கைநெறி முதுமாணிப் பட்டம்	01	2021 பெப்ரவரி 03		111.6	வெளிநாடு (நிகழ் நிலைக் கற்கை நெறி)	ADBI FinTech மற்றும் ஒழுங்குபடுத்தல் புத்தாக்கக் கற்கைநெறி பற்றிய மேம்படுத்தப்பட்ட அறிவு
2. சமூக நிலைபேறான தன்மைக்கு போதுமான பொருளாதார கற்கைநெறி	01	2021 ஜூன் 08 ஜூலை 01		111.5	வெளிநாடு (நிகழ் நிலைக் கற்கை நெறி)	சமூக நிலைபேறான தன்மைக்கு போதுமான பொருளாதார கற்கைநெறி பற்றிய மேம்படுத்தப்பட்ட அறிவு
3. IMF SAARTAC உபாயத்திட்ட வரவுசெலவினை மேற்கொள்வது பற்றி தோற்றப்பாடான செயலமர்வு - வரவுசெலவு மேற்பார்வை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுடன் உபாயத்திட்ட மற்றும் கொள்கைப் பகுப்பாய்வினை ஒருங்கிணைத்தல்.	01	2021 நவம்பர் 22 – 25			வெளிநாடு (நிகழ் நிலைக் கற்கை நெறி)	உபாயத்திட்ட வரவுசெலவினை மேற்கொள்வது பற்றி மேம்படுத்தப்பட்ட அறிவு வரவுசெலவு மேற்பார்வை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுடன் உபாயத்திட்ட மற்றும் கொள்கைப் பகுப்பாய்வினை ஒருங்கிணைத்தல்.
4. அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு	01	2021 நவம்பர் 16 – 29			வெளிநாடு (நிகழ் நிலைக் கற்கை நெறி)	அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு பற்றிய மேம்படுத்தப்பட்ட அறிவு
5. நிறுவன முகாமைத்துவம்	02	2021 ஏப்ரல் 06	ரூபா 16,000/-		உள்நாடு	நிறுவன முகாமைத்துவம
6. அடிப்படை களஞ்சிய முகாமைத்துவம்	01	2021 ஏப்ரல் 29	ரூபா 8000/-		உள்நாடு	அடிப்படை களஞ்சிய முகாமைத்துவம்

அத்தியாயம் 07– இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
01	**பின்வரும் நிதி அறிக்கைகள் கணக்குகள்/உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணங்கியது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணங்கியது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்) வர்த்தக முற்பணக் கணக்குகள்	இணங்கவில்லை		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணங்கவில்லை		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணங்கவில்லை		
1.6	ஏனைய	இணங்கவில்லை		
02	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்கியது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		

2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் *(GA – N20)* பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணங்கியது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறிவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணங்கியது		
3.3	ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	இணங்கியது		
3.4	*2014.05.11* திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. *171/2004* இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணங்கியது		
04	**வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணங்கியது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணங்கியது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணங்கியது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் *(NBD)* உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்கியது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது		
05	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		

06	**உள்ளகக் கண்காய்வு**			
6.1	நி. பி. 134 (2) டி.எம்.ஏ / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணங்கியது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்..	இணங்கியது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்கியது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	இணங்கியது		
07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணங்கியது		
08	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணங்கியது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணங்கியது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கியது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணங்கியது		

8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணங்கியது		
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்கியது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்..	இணங்கியது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணங்கியது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணங்கியது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணங்கியது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணங்கவில்லை		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணங்கியது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணங்கவில்லை		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணங்கியது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணங்கியது		
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணங்கியது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணங்கியது		

12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திரு த்தல்.	இணங்கியது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணங்கவில்லை	இது குறித்து ஓய்வூதியத் திணைக்களத்திடம் தெரிவித்தும் இதுவரை தீர்வு காணப்படவில்லை	
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	பொருத்தமற்றது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கியது		
14	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணங்கியது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணங்கியது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணங்கியது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணங்கியது		
15	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணங்கவில்லை		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணங்கவில்லை		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணங்கவில்லை		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணங்கியது		

16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணங்கியது		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கியது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணங்கியது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் குற்றச்சாட்டுகளை / .எளிதாக்குதல்	இணங்கியது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணங்கியது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	இணங்கியது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது..	இணங்கியது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணங்கியது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணங்கியது		

19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணங்கியது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்..	இணங்கியது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணங்கியது		